944

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை-6 திருதலம், மாம்பாக்கம்; செய. ஆடி. உஉ 6—7—54 தளிர்-42

## நிலைபெறுமாறு எண்ணுதியேல்!

சோழநாடு தொன்மை வாய்ந்தது; மாண்பு மிகுந்து நாகரிகத்தில் முதிர்ந்தது. அதனுடைய வளமை, அரசு, வண்மை, வீரம், கல்வி, தொழில் முதலியன வரலாற்றூழியில் பதிந்து கிடக்கின்றன.

சோழ நாட்டின் இயற்கை போற்றற் குரியது. அஃது மக்கள் வாழ்க்கைக்கு, இயற்கை நிலையில் இறையுணர்வுடன் வாழ்வதற்கு ஏற்ற பெற்றியில் அமைந்திருக்கிறது. வெம்மையால் வெந்து எரிதலோ, தண்மையால் நடுங்கி வீழ்தலோ சோணாட்டின் இயற்கையில் இல்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் அந்நாட்டின் தொலையா செல்வங்களாய் மக்களின் இம்மை-மறுமை வாழ்வுக்கு இன்பூட்டுகின்றன.

காதலின்பமும், அதன் வழிக் கடவுளின்பமும் ஒன்றித்தேங்கும் தமிழ்தக் கடல் நம் பொற் சிலப்பதிகாரம். அஃதீன்ற மகவு மணிமேகலை. இரண்டினையும் ஈன்ற பெருமை சோழநாட்டுக் குண்டு.

இவ்வுலகம் ஒரு பெரிய பல்கலைக் கழகம். இயற்கையினோடு இறையுணர்வு பெற்ற அருளாளர்கள் வாழ்ந்தும் வணங்கியும் சென்ற பல பதிகளைப் பார்த்தும் வணங்கியும் பல திறப்பட்ட மக்களுடன் பழகியும் வாழ்தல் சிறந்தது. அவ்வாய்ப்பினை யளிப்பதும் வாழ்விற்கு இன்றியமையாததும் தல யாத்திரைகளேயாம்.

வாழ்விற்கு இன்றியமையாத சமய நெறியினை நம் முன்னோர் மிகத் திறம்பட வகுத்துச் சென்றனர். பழந் தமிழர் அழகுக் கடவுளை இயற்கை வாயிலாகப் போற்றினர். கோயில் அமைப்பும் வழிபாடும், இயற்கை இறையின் உறையுள் என்னும் உண்மையை அறிவுறுத்தும் நிலையங்களாகவே துணை புரிந்து வந்தன, வருகின்றன.

'மகனே! மனத்துக்கும் உருவத்துக்கும் தொடர்புண்டு. மனம் உருவ வழிபாட்டில் ஈடுபடப்பட அமைதியுற்று இறையுணர்வு பெருகி உள்ளத்தில் ஒளி யுண்டாகும். உள்ளுவது உள்ளம். எதை? எவ்வுருவத்தை உள்ளுவது? தத்துவ உருவத்தை உள்ள வேண்டும். தத்துவ உருவத்தை உள்ள உள்ள உள்ளுணர்வும், அதன் வழியாக உள்ளொளியும் தோன்றும். அவ்வொளிக்கு அடிப்படை வழிபாடு. அவ்வழிபாடு புறத்தில் நிகழல் முதன்மையானது. அறிவும் அன்பும் உடையவனே! பசிப்பிணி அணுகாது, நரை, திரை, மூப்பு அணுகாமல், அழியா அழகு வண்ணமாக, மாண்புடையவனாக இன்பக் கருவூலங்களாகத் திகழ எண்ணின் நிமிர்ந்து நோக்கு! இறையுண்மை புலப்படும்' என அறைகூவும் சோறும், பேறும் நல்கிப் பாட்டெனப் பாய்ந்து வளங் கொழிக்கும் பொன்னி யன்னையின் தவ நிலையாம் சோழ நாட்டின் இயற்கைச் சூழலையும், வானளாவும் கோயிற் கோபுரங்களையும் கண்டும், நினைந்தும், வாழ்த்தியும், பாடியும் நிலைபெறுவோமாக!

'மூர்த்தி'

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**6-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

ஆயுள்—

| | | | | |
|---|---|---|---|---|
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| இனை | செய, ஆடி, | தளிர் |
|---|---|---|
| 6 | 6-8-54 வெள்ளி. | 42 |


## திருப்பயணத் திட்டம்

ஆசிரியர் அவர்களின் பல செய்கைத் திட்டங்களில் ஒன்று சமய குரவர்களாகிய நால்வர் பெருமக்களின் பாடல்களைப் பெற்ற திருவூர்களை எல்லாம் ஒருமுறையேனும் ஒன்றுவிடாமல் வழிபட்டு விட வேண்டும் என்பது.

அதனை அவர்கள் பகுதி பகுதியாகப் பிரித்துக்கொண்டு ஆண்டுக் கொருமுறை தம்முடைய ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமைப் பதியாகப் போற்றி வரும் திருக்கழுக்குன்றத் திருப்பதியின்கண் ஆளுடைய அடிகள் திருநாளாகிய ஆனி மகத்தின் போது நடைபெறும் திருமுறைப் பெருவிழாவுக்கு முன் நிறைவேற்றி வருகிறார்கள்.

1952ல் தொண்ட நாட்டுத் திருப்பதிகளையும் 1953ல் நடு நாட்டுத் திருப்பதிகளையும் வழிபட்டு முடித்த அவர்கள் இவ்வாண்டு சோழ நாட்டுத் திருப்பதிகளை வழிபடத் தொடங்கி 3-6-54 முதல் 27-6-54 வரை தில்லை முதல் குடந்தை வரை சென்று 75 பாடல் பெற்ற தலங்களையும் இடையிலுள்ள சில வைப்புத் தலங்களையும் வழிபட்டு மீண்டார்கள்.

தொண்ட நாட்டுத் திருப்பயணத்தை ஆசிரியரவர்கள் தமக்கு இசைந்தபோது ஒருவகை முன் ஏற்பாடும் இன்றிக் கிழமைக்குச் சில பதிகளாக மேற்கொண்டார்கள். ஆதலால், அன்பர் பலர் தொடர்பாக அதில் இணைய முடியாமற் போயிற்று. பொதுவாக (சராசரி) அதில் ஏறத்தாழ 50 அன்பர்கள் கலந்து கொள்ள முடிந்தது.

நடுநாட்டுத் திருப் பயணம் சிறிது முன்னேற்பாடுடன் தொடங்கப்பட்டது. தொண்ட நாட்டுத் திருப் பயணத்தின் போது குருகுலத்தில் ஈடுபட்ட காட்டரண்பாக்கம் வரதா ரெட்டியார் தம்பதிகளும், சென்னை முன்னாள் முதலமைச்சர் உயர்திரு ஓ பி. இராமசாமி ரெட்டியார் திருவெண்ணைநல்லூர் சிவத்திரு சின்னசாமி ரெட்டியார் போன்ற பெருமக்களும் முன்னின்று உதவி நடுநாட்டுத் திருப்பயணத்தைச் சிறப்பாக நடத்திவைத்தனர். நூற்றுக்கு மேற்பட்ட அன்பர்கள் இதில் தொடர்பாகக் கலந்து கொண்டார்கள்.

இவ்வாண்டு சோழநாட்டுத் திருப்பயணத்தில் ஒரு பகுதி ஓரளவு நல்ல முன்னேற்பாடுகளுடன் (இன்னும் நல்ல முன்னேற்பாடு வேண்டும்) தொடங்கப் பெற்று அந்நாட்டுத் திருமக்களும், திருவருட் செல்வர்களும் செய்த பேராதரவால் பெருஞ் சிறப்பாக நடந்திருக்கிறது.

இனி வரும் ஆண்டுகளில் முறையே சோழநாட்டின் மற்ற பகுதிகளிலும், பாண்டி நாடு, கொங்கு நாடு, சேர நாடுகளிலும், ஈழ நாடு வடநாடுகளிலும் உள்ள திருப்பதிகளை வழிபட்டுக் கொண்டு, அதன் பிறகு அந்த அருள் வலிவோடு, நமதருமைச் செந்தமிழ் நாட்டின் மொழி, கலை, சமயங்களின் உயர்வற உயர்ந்த உண்மையும் நுண்மையுமான ஒண்மைகளை உலகம் தெரிந்து போற்றி உய்கிற வகையில் பரப்புரை செய்ய பர்மா, மலேயா, ஆஃப்பிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா, உருசியா, சீனு முதலிய வெளி நாடுகளுக்கும் செல்ல வேண்டும் என்பது திருப்பயணத்தின் முழுத்திட்டமாகும்.

இத்திட்டத்திற்குத் திருவருள் துணை முழுதாக இருக்கின்றது என்பது இதுகாறும் அதில் நிறைவேறியுள்ள பகுதியால் மிகுதியும் அறியக்கிடக்கின்றது. மெய்யன்புடைய தொண்டர்கள், அறிஞர்கள், செல்வர்கள், சமயத் தலைவர்களின் இணக்கமும், துணையும் மேன்மேல் மிகுதிப் பட்டால் இத் திருப்பயணத்தினுல் உலகம் நலம் பெறும் என்பதில் ஐயமில்லை.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்!

—குருகுலச் செய்தியாளர்.

# யாத்திரை ஏன்?

கடவுள், உயிர்கள், பாசம் என்னும் முப்பொருள்களில் ஆன்மாக்கள் பொருட்டே இறைவன் ஐந்தொழில் நிகழ்த்தி வருகின்றான். ஆன்மாவை மூடியிருக்கும் பாசம் சிறிது சிறிதாக நீங்கச் செய்து இறுதியில் தன்பால் இறைவன் அவைகளைச் சேர்த்துக் கொள்வன். உயிர்களை மூடியிருக்கும் அறியாமை என்னும் மலம் அறவே நீங்கும் காலம் எதுவோ அதுவே இறுதியான விடுதலைக் காலம்.

இவ்வறியாமை நீங்க இறைவன் மாயையைக் கொண்டு உலகங்களைப் படைத்து அவைகளில் உயிர்கள் உடலெடுத்துப் பிறக்குமாறு செய்கின்றனன். அவ்வுடலும் மாயையாலேயே ஆக்கப்படுகின்றன. இதனால் மாயா மலத்தைக் கொண்டு ஆன்மாக்கள் அறியாமை நீங்கும் வேலையைச் செய்கிறான் என்று தெரிகிறதல்லவா? அப்படியாயின் இறைவன் நமக்காகக் கொடுத்த உலகங்களையும் உடலையும் நன்றாய் நுகரவேண்டுமன்றோ?

மாயையை நன்றாய் நுகரவேண்டுமென்னும்போது நுகர்ச்சியில் இருவகையுண்டு என்பதையும் அறியவேண்டும். ஒன்று இறைவன் கருத்துக்கு இணங்க அறியாமை மலம் நீங்கி இறைவனை அடைய வேண்டும் என்று நுகர்வது; மற்றொன்று மாயா மலத்தின் மயக்கத்தில் அகப்பட்டுப் போக உணர்ச்சியோடு நுகர்வது. பின் சொன்னபடி நுகர்வோர் இறைவன் கருத்துக்கு மாறாக நடப்பதால் பிறவி மல்கி இறைவன் திருவடி சேர்வதினின்றும் விலகிச் செல்பவராவர்.

இஃது இங்ஙனமாக, இறைவன் கருத்துப்படி நுகர்வது எப்படியென்று தெரிந்தால் அதன்படி நுகர்ந்து உய்யலாம். நமக்கு உடலும் உலகமும் மாயையின் வடிவமாக நம் எதிரே நுகர்வதற்கு உள்ளன என்று பார்த்தோம். உடலைத் திருவருள் பதிவதற் கேற்ற முறையில் வைத்துக் கொண்டு உலகில் திருவருள் பதிவதற்கேற்ற முக்கிய இடங்களில் சென்று மாயையிலே இறைநினைவோடு தோயும்போது திருவருள் நன்றாய்ப் பதியும். மாயையைத் திருவருள் ஆன்மாவில் உணர்ச்சியோடு பதிய உதவுகின்ற ஒரு கருவி என்று உணர்ச்சியோடு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

உடலைத் திருவருள் பதிவுக்கு ஏற்றபடி வைப்பதென்பது யோக முறையாகும். உலகில் திருவருள் பதிவுக்கு ஏற்ற இடங்களுக்குச் செல்வதென்பது யாத்திரையாகும். திருவருள் பதிந்த இடத்துக்குப் போகவேண்டும் என்பது சரி; அத்தகைய இடங்களை எப்படித் தெரிந்து கொள்வது?

அருட் பாடல்கள் கிடைத்த திவ்விய தலங்கள் பல நம் நாட்டில் மலிந்து இருக்கின்றன. அருட்பாடல்கள் தோன்றக் காரணமான இடம் அத்தகைய சிறந்த இடம் என்பது சொல்லவும் வேண்டுமோ?

இப்பொழுது யாத்திரை ஏன் வேண்டுமென்பதை ஒருவாறு உணர்ந்தோம். யாத்திரையால் நாம் அடையும் நலம் மிகப் பல. சுருங்கக் கூறின் திருவருள் பதிவுக்கு யாத்திரையைவிடச் சிறந்த வழி இல்லை. சற்குரு வாய்க்க வேண்டுமாயினும் யாத்திரை சென்று பக்குவம் பெறவேண்டும் என்பர்.

பாசப் பற்று அறுவதற்கு யாத்திரையில் பயிற்சி ஏற்படுவது போல அன்றாட வாழ்க்கையில் ஏற்படாது. கஷ்டங்களைப் பொறுக்கும் பொறுமையும், கஷ்டப்படும் பிறருக்கு உதவவேண்டும் என்ற தயாள குணமும் உண்டாவதற்கு யாத்திரையில் நிரம்ப வாய்ப்புகள் உண்டு. இன்னும் யாத்திரையினால் நாம் அடையும் உலகியல் அநுபவப் பயன்களை விரிக்கின் பெருகும்.

இங்ஙனம் யாத்திரையினால் இம்மை மறுமையாகிய இருமைக்கும் வேண்டிய நன்மை பல விளையும் என்று உணர்ந்து மாம்பாக்கத்தில் குருகுலம் நிறுவி நடாத்திவரும் ஆசிரியர் இளவழகனார் அவர்கள் தம் அன்பர், மாணவருடன் ஆண்டுக்கொரு முறை யாத்திரை சென்று வருகின்றனர், இவ்வாண்டு சென்ற மாதம் சோழ நாட்டின் ஒரு பகுதிக்கு யாத்திரை சென்று வந்தனர். அடுத்த ஆண்டும் திருக்கழுக்குன்றத்தில் மாணிக்க வாசகர் திருநாளையொட்டி யாத்திரை மேற்கொள்வர்.

—முத்துசாமி.

குருகுல மாணவன்

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# சோழ நாட்டுத் திருப் பயணம்

எங்கள் ஆசிரியர் நால்வர் பாடலைபெற்ற திருவூர்களையெல்லாம் பகுதி பகுதியாக வழிபட்டு வருகிறார். இவ்வாண்டு அவர்களின் சோழநாட்டுத் திருப்பயணம் தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண் துவக்கப்பெற்றுக் குடந்தைக்கும் பேசுவார் திருமுன்னிலையில் முடிவுற்றது.

ஆடவரும் மாதருமாகச் சற்றேறக்குறைய இருநூற்றுவர் இப்பயணத்தில் கலந்து கொண்டோம். எண்பதுக்கு மேற்பட்ட பாடல்பெற்ற திருத் தலங்களைத் தரிசிக்கும் பெரும் பேற்றினைப் பெற்றோம்.

“சோழநாடு சோறுடைத்து” ஆம். அதுமட்டுமன்று; சைவ நற்சமயமுடைத்து, சைவநன்னெறியுடைத்து, சைவ நந்நீதியுடைத்து, சைவநற்பண்புகளுடைத்து, சைவநற்சான்றோர்களுடைத்து ஏராளமான சிவாலயங்களுடைத்து, இம்மை மறுமை மும்மைக்கும் வேண்டுவதான எல்லாச் செம்மை நலங்களுமுடைத்து எனக் கண்கூடாகக் கண்டு பெருமகிழ்வெய்தினோம். எங்கும் தெய்வ ஒளி வீசுகின்றது; சைவமணம் கமழ்கின்றது.

சைவசமயாசிரியர் ‘நால்வர்’ பாடல்பெற்ற தலங்கள் எங்கிருப்பினும் சரி, அங்கு சென்று வழிபட்டு மீள்வது எனும் எங்கள் ஆசிரியரின் குறிக்கோளுக்கேற்ப நாடு நகரங்கள், மூலை முடுக்குகள், மேடுபள்ளங்கள் எல்லாம் உலவினோம். ‘எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர்க்கடவுள் என்றேத்தி’ இறைவனைத் தலங்கள்தோறும் தீர்த்தங்களில் மூழ்கி முறையாய் எங்கள் ஆசிரியர் பெருமானின் அருளுரைகளோடும் வாழ்த்தோடும், வழிபட்டோம். ‘சைவத்தின்மேற்சமயம் வேறிலை’ ‘சிவனொடொக்கும் தெய்வம் தேடினுமில்லை’ என்னும் உண்மைக்குரிய சிவத்தின் சிறப்புப் பண்புகளாகிய காமனை எரித்தலும் ஏமனை உதைத்தலும், மாதொரு பாகனாய் வீற்றிருத்தலுமான வீரட்டானத் தானங்களையும் தரிசித்தோம்.

நிலமங்கை நெகிழும்படி ஆடவரும் மகளிரும், மூத்தோரும் இளைஞரும், குழந்தைகளுமாகச் சுமார் இருநூற்றுவர், செல்வர், எளியோர், வாழ்க்கையில் பல்வேறு துறைகளில் ஈடுபட்டவர்கள், பல்வேறு அமைப்புகள் வாய்க்கப் பெற்றவர்கள் தம் நிலைகளையெல்லாம் மறந்து, எல்லோரும் ஓர் குலம் ஓர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் போன்று பேதமின்றிப் பழகியும் வீடு, வாசல், மாடு, மனை, மக்கள், சுற்றம் சூழல்களை எல்லாம் துறந்த துறவிகளைப் போன்றும், எங்கோ ஓர் வான உலகில் ஒரே தெய்வச் சிந்தனையோடு சஞ்சரிப்பது போன்ற நிலையில் மூழ்கியும் சிறந்தோம். நாடோறும் அதிகாலையிலிருந்து நள்ளிரவிற்குப் பிறகும் கூட எங்கள் வழிபாடு நீளும்.

எங்கும் சைவ நற்பெருமக்கள் தம் அளவு கடந்த அன்பைச் சொரிந்தனர்; ஆர்வம் காட்டினர்; ஓடோடியும் உழைப்பெடுத்தனர்; பெரு மகிழ்ச்சியோடு வீதிகளில் தண்ணீர் தெளித்து வைத்தும் தோரணங்கள் கட்டியும், திருவிளக்கேற்றி வைத்தும், பூரணகும்பம், யானை, முத்துக் குடை, விருதுகள், மேள தாளங்கள், தேவார இன்னிசைகள், தூபதீபங்களோடு பெருந்திரளாக எதிர்கொண்டு வந்தும் வரவேற்றனர். வழிபாட்டுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் நிரம்பச் செய்து வைத்து எங்களோடு கூடி இறைவனைத் தொழுதனர்; ஊர்வலங்கள் ஒலி பெருக்கிகளோடு ஆசிரியரின் விரிவுரைகள் எல்லாம் ஏற்பாடு செய்தும் வாழ்த்திதழ்கள் படித்துக் கொடுத்தும் இனிப்புகள், பழங்கள் வழங்கியும், சித்திரான்னம், சிற்றுண்டிகள் அளித்தும், தங்குவதற்கு வசதியான இடங்கள் தந்தும் ‘இராசோபசாரம்’ செய்தனர், பெருவிழாக் கொண்டாடினர். அவர்களின் ஆர்வமும் அன்பும், கனிவும் களிப்பும், மகிழ்ச்சியும், பெருமிதமும் என்றென்றும் மறக்க முடியாதன.

நாங்கள் ஆண்கள் ஒரு புறமும் மாதர்கள் மற்றொரு புறமுமாக அணி அணியாய் நின்று, திருமுறைகளை ஓதிக் கொண்டு சென்று முறையாய் வழிபடுவதைப் பெருவியப்பாக நோக்கிச் “சிவனடியார்களே! வாருங்கள்! நாங்கள், நால்வர் பெருமக்கள் இப்படிப் பெருந்திரளோடு திருவூர்களை வழிபட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்; நூல்களில் படித்திருக்கிறோம்; நேரில் கண்டதில்லை. ஆனால், இதோ இன்று அப்படிப்பட்ட சிறந்த பெருங் காட்சியைக் கண்முன் காண்கின்றோம்; இதுவே எங்கள் பிறவியில் பெறத் தக்க பெரும் பேறு!” என விம்மிதத்தோடு கூறி மகிழ்ந்தனர்.

இதோடு நிற்கவில்லை எங்களை வரவேற்பது; பொன்னித் தாயும் தன் அலைக் கரங்களால், அகன்ற இரு கரையும் அன்பு வெள்ளம் புரள, ஓடோடியும் வந்து எங்களை

அணைத்துக் கொண்டாள் வாரித் தழுவி முத்த மிட்டு உச்சி மோந்து "ஆழிக் (பிறவிக் கடல்) கரையில் அல்லல் பட்டு உங்கள் வாழ்க்கைக் கடலை கடப்பதற்கு வழிதேட வந்துள்ள ஆர்வமிக்க அருமைக் குழவிகளே! வாருங்கள்! தென்னாடுடைய சிவன், எக்காட்டுக்கும் இறைவனான சிவபெருமான் திருத்தலங்களைத் தரிசித்து அவன் தன் திருத்தாள்களில் களைப்பாறுங்கள். இதோ நானும் நீங்கள் செல்லும் இடங்கடோறும் உங்கள் கூடவே தொடர்ந்து வருகிறேன் என் மடியில் அமர்ந்து விளையாடுங்கள்" என்று வரவேற்றாள்.

திருவாவடு துறையி லிருந்து திருக் கோழம்பம் செல்லும் வழியிலேயே அன்னை 'காவிரி' ஆடி அசைந்து வந்து எங்களை இப்படி ஆட்கொண்டு வாழ்த்தினாள். அவள் அழகுக் கோலத்தையும், அவள் அங்கு செய்து வைத்திருக்கும் அற்புத இயற்கை எழிலையும், அவளால் விளைந்த ஆக்கமாக இருமருங்கும் வானளாவ எழுந்து ஒன்றோடொன்று போட்டி யிட்டுக் கொண்டு ஓங்கி நிற்கும் தென்னை, பனை, கமுகு முதலிய தோப்புகளையும், மா, பலா, வாழை தோட்டங்களையும், எங்கும் குளிர்ந்த நிழல் பரப்பிக் கொண்டு நிலவும் சோலை சாலைகளையும் அளவிட்டு விவரிக்க முடியாது. இவ்வற்புத இயற்கை வனப்புகளைக் கண்டு களித்து "நடவாய் வாழி காவேரி!' என அவ் வன்னையைப் போற்றி வணங்கி, அவளிடம் அடுத்த ஆண்டு இன்னும் பெருந் திரளாக வருவதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு, உள்ளத்தை அங்கு வைத்துவிட்டு உடலை இங்குக் கொண்டு மீண்டோம்.

என்னே! இப் பிறவியில் யாங்கள் பெற்ற பெரும் பேறும்! உள்ளுந்தோறும் உவகை மீதூர்கிறது! மூவேந்தர் காலத் தமிழகத்தை, முச் சங்ககாலத் தமிழகத்தை, தேவாரமருளிய மூவர் முதலிகள் காலச் சைவ நற் பண்பாட்டை யெல்லாம் ஒருங்கே நின்று சோழ நாட்டில் காணப் பெற்றோம் யுக்கால வள்ளற் பெருமக்களைப் போன்றே, இன்சொல் இனிய முகம், ஈவு இரக்கம், இனிய நற் சைவப் பண்புகள் எல்லாம் அமையப்பெற்ற பெருமக்கள் பலரைக் கண்டு உள்ளம் பூரித்தோம்; ஊக்கமும் உணர்ச்சியும் பெற்றுச் சிறந்தோம்.

தில்லை, திருவெண்காடு திருநல்லத்து (கோனேரி ராஜபுரம்) அம்பலவாணர்களின் அற்புதக் கோலங்களையும், திருக்கடவூர் வீரட்டம் (எமனை உதைத்த இடம்) திருக்குறுக்கை வீரட்டம் (காமனை எரித்த தலம்) முதலிய வீரட்டானக் கோயில்களையும், திருவீழிமிழலைத் திருமணக் கோலத்தையும், திருநனிபள்ளியின் தக்ஷிணாமூர்த்தி முதலிய பண்டைத் தமிழரின் அற்புதச் சிற்பக்கலைத் திறத்தையும் எப்படி மறக்க முடியும்?

எங்கள் ஆசிரியர்ப் பெருந்தகை திருப்புன்கூரில் (நந்தனார் முத்தியடைந்த பதி) நம் பசு போதத்தை நினைந்து உள்ளம் குழைந்து உருகி உணர்ச்சி மேலீட்டால் நாத்தடுமாற வாக்குத் தடைப்பட்டுப் பேச முடியாத நிலையில் (அவரை இதுவரை அப்படி என்றும் கண்டதில்லை) நின்ற உருக்கமான காட்சியை மறக்க முடியுமா?

எல்லாவற்றிற்கும் மேலாகச் சோழ நாட்டுச் செல்வர்களும் சைவ நற்பெருமக்களும், திருமடங்களும் காட்டிய ஆர்வம், அன்பு, கனிவுகளையும், செய்த சிறப்புக்களையும், உதவிகளையும் என்றென்றைக்கும் மறக்கவே முடியாது!

எங்கள் திருப் பயணத்தை முடிக்க மனமின்றி முடித்துத் திருக்குடந்தையி னின்று திரும்புங்கால் திருக்கழுக்குன்றத்தில் வழுக்கா திருக்கும் இறைவனை வழிபட்டுக் கொண்டு திருமுறை இன்னிசைப் பெருவிழாவைக் கண்டு களித்து எங்கள் இல்லங்கள் வந்தடைந்தோம்.

திருப்பயணக் காலத்தும், அதன் முடிவிலும் இன்றும் உள்ள எங்கள் மன நிலையைப் பற்றி ஒரு வார்த்தை கூற வேண்டும்.

அன்று மணிவாசகப் பெருந்தகை திருப்பெருந் துறையில் குருந்தை மாநிழலில் இறைவன் குருவடிவில் அடியார் குழாம் சூழ வீற்றிருந்து தன்னை ஆட்கொண்ட பின் எல்லாரும் மறைந்தபோது தம் தனிமையை நோக்கிச் சொல்லொணாத் துயரம் எய்தியது போன்ற நிலை தான் எங்கள் நிலையும்.

ஏறக்குறைய ஒரு மாதகாலம் ஆசிரியரோடும் அன்பர்களோடும் இடைவிடாது பழகி உலவியபின் அவர்களையும் சிவாலயங்களையும் விட்டுப் பிரிவது மிக்க வருத்தம் தந்தது. இன்று கனவிலும் நனவிலும் எங்களுக்குத் திருப்பயண நினைவுதான். கண்ணை மூடினால் சிவாலயங்கள் எதிர் நிற்கின்றன; பெருந் திரளான கூட்டம் கண் முன் தோன்றுகிறது; எங்கள் குருகுலக் குடும்பம் இறைவனை

வணங்கிக் கூடிக் களிக்கின்றது. எங்கள் ஆசிரியப் பெருந்தகையின் அற்புதமான அருமைமிக்க அருளுரைகள் இரு செவிகளிலும் 'ரீங்கார'மிடுகின்றன. அடுத்த ஆண்டுத் திருப்பயணம் என்று வரும்? எப்போது தொடங்கும்? என நாட்களை எண்ணிக் கொண்டே ஏங்கி நிற்கின்றோம்!

நமச்சிவாய வாழ்க!
நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்னெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன்
தாள் வாழ்க!

—மோகனரங்கன்.


Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட்மார்க்

ELEPHANT KISAN
எலிபெண்ட் கிசான்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.


சோழநாட்டு யாத்திரை:

௨

# ஆர்கொலோ சதுரர்?

(கலி விருத்தம்)

1. உலக வாமொளிப் பொதுமைநற் றிருநெறி
நிலவு நம்சிவ நெறியதன் மாட்சிகட்(கு)
அலகி லாப்பணி யாற்றி யருள்வலி
குலவ நின்ற கொள்கையர் நால்வரால்!

2. நாட்டி லன்றறம் நாத்திகப் போக்கினில்
கூட்ட விழைந்த கூட்டமும், கொள்கையில்
வேட்டம் விளைத் தூநல் வீட்டு நெறிக்கிடல்
நாட்ட மகற்றி நலிவுசெய் கூட்டமும்,

3. அகல இருமையும் ஆற்று மியற்கைப்
புகல்நெறிப் போதனை புரிந்தவர் தாய்மொழி
திகழுநற் றூயகம் ஆதிய தேட்டங்கள்
மிகவும் போற்றி உயர்நெறி மீட்டினர்!

4. இனைய வோஅவர் இன்றும் அகன்றிடாப்
புனைவுச் சாதிப் புன்மைகள் போக்கிட
வினையென் றேங்கி விழும்மடி தேய்த்திட
நினைவ ரும்பணி செடிதி யற்றினர்!

5. ஊர்கள் தோறும் உலாவிப் பலபல
நீர்மை செய்து நிலத்திடு தொண்டுகள்
ஏர்கொ ளஇடைக் காலத்தி லேயவர்
சீர்மி கச்செயார் என்னிமென் செய்வதே!

6. தாயுந் தந்தையு மாந்தமிழ் சைவமும்
ஏயுந் திராவிட நாக ரிகமுமின்(று)
ஆயும்வகையுமி லாமலன் றேகெட்டுப்
போயொ ழிந்திருக் கும்மிது பொய்மையோ?

7. மக்க ளாட்சி மலர்ச்சி புரட்சியென்(று)
எக்க ளித்திடு மின்றும் இயற்றலா
மக்கள் தொண்டுகள் மன்னரும் செல்வரும்
தொக்குச் செய்திடத் தோற்றினர் அன்றரோ!

8. அன்ன வர்க ளடிச்சு வட்டினை
இன்ன நாளிலெம் இளவழ கப்பெயர்
துன்னு மாசான் தொட்டுப் பணிசெய
அன்னி னுனவன் மொய்ம்பு சிறியதோ!

9. அமைப்புகள் பலபல ஆற்றகி லாவகை
இமைக்குமுன் பலதிறத் தியலுமெம் போலியர்
தமைத்தம தருநெறி தொடர்ந்திடச் செய்தவர்
சமைத்திடு பணிகளின் சதுரெவண் சொல்வதே!

10. அண்மையில் இருநூ றன்பர்கள் மாணவர்
உண்மையைத் தொடரும் ஒளியெனப் பின்வர
வண்மைகொள் சோழ வளப்பதி கண்டபேர்
எண்மையை என்னொரு நாவும் இயம்புமோ!

11. கல்வியும் செல்வமும் கவினுற வாய்த்தவர்
பல்வகைத் தொழிலர்கள் நல்வகை அலுவலர்
மெல்லியல் மாதர்கள் மிகவு முதியவர்
செல்வக் குழவியர் சிறிதும் நடந்திலா,

12. வசதிகள் மிக்க வழிவழிச் செல்வர்கள்
அசதி அறிந்திடா அருமையர் பெருமையர்
இசைமுதற் கலைஞர்கள் தொண்டர்கள் எல்லாம்
விசையுணர் வேதோ விழுங்கிய நிலையராய்;

13. வேளையில் உணவிலை வேண்டிய ஓய்விலை
நாளைய வசதிகள் என்னெனும் நனவிலை
தாளிலும் வலிவிலை தோளிலும் மிகுசுமை
எளிதம் இலைஇஃ துண்மையிந் நிலையிலும்;

14. அடுத்ததெவ் வூர்எவர் பாடல தற்கிவண்
விடுத்திடும் ஊரின் வியத்தகு நிலைகளென்
மடுத்திடும் அருளி(ன்)னும் மாட்சி யடைந்திட
எடுத்தகு பணிகளென் னென்னெனச் சூழுவார்.

15. ஊர்வலம் வருவார் உவந்தடுத் திடும்வர
வேற்பினை ஏற்பார் வேண்டுபல் விளக்கங்கள்
சார்தரச் செய்வார் தகும்வகை வழிபா(டு)
ஏர்தரப் புரிவார் இன்னுரை ஈவார்;

16. 'சான்றோ ருடையது தொண்டாகன் று'டெனும்
ஆன்றோர் மொழியை அணிசெய்வ ரெங்கும்
என்ற வசதிகள் எதுவெனும் கொண்டமைந்(து)
ஆன்ற பணிசெயும் ஆர்வத்த ராவார்;

17. ஆர்வத் தமைந்தநன் னிகழ்ச்சிகள் யாவெனும்
நோவதெந் நேரத்தி லாயினும் நீடுறும்
ஓர்வகை வசதியும் உவந்திலர் உடல்நலம்
சீர்கெடு மெனனத் திரிந்தனர் குறைவிலர்;

# ஒரு யாத்திரை அநுபவம்

"ஒரு கப்பல் தலைவன் தான் போய்ச் சேரவேண்டிய இடத்தின் நினைவோடு காரியங்களை கவனித்துக் கொண்டு செல்லுவதுபோல் திருவருள் நினைவோடு வாழ வேண்டும்" என்று உதாரணங் காட்டி விளக்குவர் பெரியோர். இவ் வுதாரணத்தை எத்தனையோ முறை யான் படித்திருக்கிறேன். ஆயினும், நன்றாய்ப் புரிந்து கொண்டது இந்தச் சோழ நாட்டு யாத்திரையில் தான்.

யாத்திரை தொடங்க ஒருமாத காலத்துக்கு முன்னிருந்தே அதன் நினைவாகவே இருந்தோம். பணம் செலவு செய்யும் போது யாத்திரைச் செலவுக்குப் பணம் வேண்டுமே, சிக்கனமாகச் செய்ய வேண்டும் என்று தோன்றும்; புதுத் துணிகள் எவையேனும் வாங்கினால் இவைகளை யாத்திரையின் போது அணிந்து கொள்ள வைத்துக் கொள்ளலாம் என்று தோன்றும்; அலுவலகத்தில் விடுமுறைகள் எடுக்கவேண்டிய சந்தர்ப்பங்கள் வந்தாலும் யாத்திரைக்கு விடுமுறை தேவை யிருக்குமே என்று தோன்றும்; உடலுக்குச் சிறிது அசௌகரியம் நேர்ந்தாலும் யாத்திரைக்குப் போகவேண்டுமே என்ற நோக்கத்தில் மருந்து ஏதேனும் உட்கொண்டு பேணிக் கொள்ளத் தோன்றும்; உற்றார் உறவினர்க்குக் கடிதம்

18. தில்லை முதல்செழித் தோங்கு குடந்தை
எல்லை வரையிவர் எங்கெங்கு செல்கினும்
சொல்லும் வகைத்தோ சோழநன் னாட்டினர்
ஒல்லை இவர்கட் குதவிய வகைகள்!

19. ஏர்திகழ் யானை குடைகொடி நிறைகுடம்
ஓர்வகை யோஅவர் உவந்தளி வரவேற்(பு),
ஆர்வமொ டூட்டிய அமுதுசிற் றுண்டிகள்
கார்திகழ் இனிப்புகள் நல்லபல் சுவைநீர்!

20. வரிசை வரிசையாக் காளைநல் வண்டிகள்
பரிசில் முதல்விசை யூர்திகள் பண்புடன்
வரிசை வழாது வழங்கினர் அன்னவர்
பரிசை யீண்டு பகரவும் ஒல்லுமோ!

21. தில்லையில் திருமுறை; குடந்தைகுற் றாலத்தில்
வல்ல சிவனடி யார்திருக் கூட்டத்தார்;
நல்லசீர் காழியில் சம்பந்தர் கழகத்தார்;
அல்லல்தீர் ஆடு துறையப்பர் நெறியினர்

22. என்றுபற் பலஅருள் அமைப்பினர் முன்வந்(து)
இன்றிவர்க் காற்றிய எழில்மிகு சிறப்புகள்
நின்றது நூல்களில் செவிகளில் அல்லால்
நன்றிவண் காணநாம் கடந்தது முண்டோ!

23. திருமடங் களும்தேர்ந் தநற் செல்வரும்
அருமை தெரிந்தநல் லன்பரும் தம்முடைப்
பெருமை சிறுமைகள் பெரிது மறந்தனர்
அருமை அருமையீ தென்றே அணைந்தனர்;

24. ஊட்டினர் ஊர்வலம் நடத்தினர் ஊரெலாம்
காட்டினர் கோயில்கள் கழுவினர் மெழுகினர்
நாட்டினர் தோரணம் நல்வினைக் காதிய
கூட்டினர் எங்குமற் கூட்டங்கள் மாதோ!

25. இவ்வகைப் பணிஅருள் பயணமேற் கொண்ட
மெய்வழித் தலைவரோ? மேவிய துணைவரோ?
உய்வழி தேர்ந்துபல் உதவிகள் செய்த
அவ்வகை அன்பரோ! ஆர்கொலோ சதுரர்!

—தமிழ்ச் சிறுவன்.

# திருமுறைகளும் திருப் பயணமும்

ஆசிரியரின் திருப்பயணம் திருமுறைகளை ஒட்டியது. அது, சிறப்பாக உள்நாட்டில் அவற்றின் பாடல்களைப் பெற்ற திருவூர்களை எல்லாம் ஒன்றுவிடாமல் வழிபடுவது என்றும், வெளிநாடுகளில் அவற்றின் உண்மைகளைப் பரப்புவது என்றும் இரு பிரிவில் அடங்கும்.

“உலகியல் பொருளியல் அரசியல் நிலைகளின்படி சிறப்புற்றிருக்கும் பல இடங்களை விட்டுப் பாடல் பெற்ற திருவூர்களை, பெரும்பாலும் இன்றைய நிலையில் சிற்றூர்களாய், ஏன் கோயில் தவிர வேறு ஒன்றும் இல்லாத, அதுவும் மிகப் பாழ்பட்ட நிலையில் உள்ள, வெற்றூர்களைப் பார்க்க விழைந்தது என்னை?” என்று தோற்றும்.

திருமுறை பாடல் பெற்ற இடங்கள் அருட்பதிவுள்ள ஆற்றல் மிக்க இடங்கள், அவ்விடங்களை வழிபட்டுப் பணி நோக்கத்துடன் அங்கங்கே பதிந்துள்ள பல்வேறு அருளாற்றலை வாங்கி வளர்த்து வழங்கி மன்பதையை உய்விக்க வேண்டும் என்பதே நோக்கம்.

(வரும்)

எழுத நேர்ந்தால் யாத்திரை நினைவே முதன் முதலில் வந்து நிற்கும்; சுருங்கக் கூறின் ஒரு நொடிகூட யாத்திரையை மறந்ததில்லை எனினும், எங்கள் அன்றாடக் கடமைகளிலும் தவறியதில்லை. இவ் வநுபவமே அருள் நினைவோடு வாழ்வதெப்படி? என்ற விளக்கத்தை ஓரளவு எங்களுக்குத் தந்திருக்கின்றது.

—முத்துசாமி.
குருகுல மாணவன்

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்)